# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.11.20 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)

**(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுதங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்ககானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் அவர்களால்
பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 29.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தில் 54அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது என்பதுடன் இப்பிரிவின் சட்டப்பயன், எவரேனுமாளினால் அவர் இலங்கைப் பிரசையொருவராகவிருந்தாலுஞ்சரி அல்லது இல்லையாயினுஞ்சரி ஆழ்கடலில் அபாயகரமான அவுடதங்களை உற்பத்தி செய்தல், உடைமையில் வைத்திருத்தல் அல்லது வியாபாரம் செய்தல் என்பவற்றைத் தடைசெய்வதற்கான புதிய ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

*வாசகம் 7* : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய உட்பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய உட்பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 9*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் வாசகம் 2 இனால் ஆக்கப்பட்ட புதிய உட்பிரிவின் உட்புகுத்துதலுக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

## நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)

ச.வ. - ஓ 39/2024

### (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம் 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் 54அ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அக் கட்டளைச்சட்டத்தின் 54அஅ என்னும் பிரிவாகப் பயன்வலுப் பெறுதலும் வேண்டும்:- — 218 ஆம் அத்தியாயத்தின் 54அஅ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

"ஆழ்கடலில் அபாயகரமான அவுடதங்கள் உற்பத்திசெய்தல், உடைமையில் வைத்திருத்தல் அல்லது வியாபாரஞ் செய்வதற்கெதிரான தடை.

**54அஅ.**(1) இலங்கைப் பிரசையொருவராயினும் சரி அல்லது இல்லையாயினுஞ்சரி,–

(அ) இலங்கையில் அல்லது இலங்கை தவிர்ந்த அரசொன்றில் பதிவு செய்யப்பட்ட கப்பலொன்றிலிருந்து கொண்டு அல்லது அரசற்ற கப்பலொன்றிலிருந்து கொண்டு ஆழ்கடலில்; அத்துடன்

(ஆ) இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளினால் அல்லது பணிப்பாளரின் உரிமமொன்றினால் அனுமதிக்கப்பட்டவாறு தவிர அல்லது அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கவன்றி அல்லது அத்தகைய உரிமத்திற்கு இணங்கவன்றி வேறு வகையில்,

மூன்றாம் அட்டவணையின் III ஆம் பாகத்தில் தரப்பட்டுள்ள ஏதேனும்

அபாயகரமான அவுடதத்தை சொல்லப்பட்ட அட்டவணையின் III ஆம் பாகத்தின் II ஆம் நிரலில் தரப்பட்டுள்ள தொகைக்கு கூடுதலாக உற்பத்தி செய்கின்ற, உடைமையில் வைத்திருக்கின்ற, அல்லது வியாபாரம் செய்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன் மேல், சொல்லப்பட்ட அட்ட வணையின் III ஆம் பாகத்தின் III ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டுள்ள தவறொன்றின் புரிகையில் ஈடுபடும் ஏதேனும் அரசற்ற கப்பல் பறிமுதல் செய்வதற்கு ஆளாதல் வேண்டுமென்பதுடன் 79 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய கப்பல் தொடர்பில் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையதாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக-

"ஆழ்கடல்" என்பது, கடல் சட்டம் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் கீழ் (UNCLOS) அதற்கு குறித்தளிக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உற்பத்தி செய்தல்" என்பது, 54அ என்னும் பிரிவின் (3) ஆம் உட் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நாடற்ற கப்பல்" என்பது, ஏதேனும் அரசின் சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படாத அல்லது கொடி யொன்றைக் கொண்டிராத ஏதேனும் கலம் எனப் பொருள்படும்;

"வியாபாரம் செய்தல்" என்பது, 54அ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 54ஆ என்னும் பிரிவு, "54அ என்பதன்கீழ்," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவுகள் 54அ மற்றும் 54அஅ என்பவற்றின்கீழ்," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 78 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "பிரிவு 54அ என்பதன் கீழான தவறொன்றுக்கு குற்றவாளியாகவுள்ள ஆளொருவர் தவிர," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவுகள் 54அ மற்றும் 54அஅ என்பவற்றின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள ஆளொருவர் தவிர," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 83 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "54அ மற்றும் 54ஆ என்னும் பிரிவுகளின் கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "54அ, 54அஅ மற்றும் 54ஆ என்னும் பிரிவுகளின் கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "பிரிவு 54அ வின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது பிரிவு 54ஆ வின் கீழான" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 54அ வின் (1) ஆம் உட்பிரிவின்கீழ், பிரிவு 54அஅ வின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது பிரிவு 54ஆ வின் கீழான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பில் “54அ மற்றும் 54ஆ என்னும் பிரிவுகளின்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “54அ, 54அஅ மற்றும் 54ஆ என்னும் பிரிவுகளின்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 84 ஆம் பிரிவு, “பிரிவு 54அ வின் (1) ஆம் பிரிவினதும் 54ஆ என்னும் பிரிவினதும்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “பிரிவு 54அ வின் (1) ஆம் உட்பிரிவினதும், பிரிவு 54அஅ வின் (1) ஆம் உட்பிரிவினதும் 54ஆ என்னும் பிரிவினதும்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவைத் திருத்துதல்

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு, “54அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மற்றும் 54ஆ என்னும் பிரிவின்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “54அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், 54அஅ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் மற்றும் 54ஆ என்னும் பிரிவின்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவைத் திருத்துதல்

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 86 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின், “54 ஆம் பிரிவின்கீழ் அல்லது 54அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளின்கீழ்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “54 ஆம் பிரிவின்கீழ், 54அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளின்கீழ் அல்லது 54அஅ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின், “பிரிவு 54 அல்லது பிரிவு 54அ என்பதன் உட்பிரிவு (1)” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “54 ஆம் பிரிவு, 54அ என்னும்

பிரிவின் (1) ஆம் உட்பிரிவு அல்லது 54அஅ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவைத் திருத்துதல்

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 87 ஆம் பிரிவு, "பிரிவு 52, பிரிவு 54 மற்றும் பிரிவு 54அ என்பதன் உட்பிரிவு (1) ஆகியவற்றின்கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பிரிவு 52, பிரிவு 54, பிரிவு 54அ வின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகள், பிரிவு 54அஅ வின் (1) ஆம் உட்பிரிவு மற்றும் 54ஆ பிரிவு ஆகியவற்றின்கீழ்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**10**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.